18th February 1961]

SRI N. R. THIAGARAJAN : இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய மூன்று தாலூகாக்களையும், நெல்லை ஜில்லாவிலுள்ள கோவில்பட்டி, சங்கரன்கோயில் ஆகிய இரண்டு தாலூகாக்களையும் ஒன்றாகச் சேர்த்து, விருதுநகர் ஜில்லா என்று அமைத்தால், 15 லட்சம் மக்களைக் கொண்ட அழகிய ஜில்லாவாக இருக்குமென்பதைக் கருதி, சர்க்கார் புனராலோசனை செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஜில்லா மாத்திர மல்ல ; கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்கள், இன்னும் பல ஜில்லாக்களையும் இம்மாதிரியாகப் பிரிக்கவேண்டுமென்ற யோசனை வந்தது. தற்காலிகமாக, புதிதாக டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ ஆபீசர்கள் வேலை செய்கிறார்கள். மறுபடியும் இதைப்பற்றி யோசிக்கலாம்.

SRI A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள், வேறு பல ஜில்லாக்களிலிருந்தும் இம்மாதிரி கோரிக்கை வந்ததாகக் குறிப்பிட்டார்கள். எந்த எந்த ஜில்லாக்களிலிருந்து கோரிக்கை வந்தது என்று அமைச்சர் அவர்கள் தயவுசெய்து சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தஞ்சை ஜில்லாவும் அவைகளில் ஒன்று.

Dispensary (Ariyalur)

* 373 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the existing staff and bed-strength in the Ariyalur Local Fund Dispensary are adequate?

THE HON. SRI M. A. MANICKAVELU : The present sanctioned bed-strength of the Government Hospital, Ariyalur, is 20 and the staff employed is more than that admissable under the rules. The question of increasing the bed-strength of the hospital is under consideration.

SRI K. R. VISWANATHAN : இந்த அரசாங்க மருத்துவ விடுதியில் அலுவலக எழுத்தாளர், கம்பௌண்டர், இவ்விருவருடைய வேலைகளையும் ஒரே ஒருவர்தான் பார்த்துக்கொண்டு வருகிறார். இந்த மருத்துவ விடுதிக்கு ஐந்து வருஷங்களுக்கு முன் வந்துகொண்டிருந்த புற நோயாளிகளுடைய எண்ணிக்கை இன்றைக்கு இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா ? அப்படியானால், அலுவலக எழுத்தாளர், கம்பௌண்டர் இவ்விரு வேலைகளுக்கும் தனித் தனியே நபர்களை நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?

[18th February 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : அவுட்-பேஷண்ட் டிபார்ட்மென்டுக்காக வேறு ஒரு புதுக் கட்டிடம் கட்டும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. அது பூர்த்தி ஆனதும் 12 படுக்கைகளுக்கு அங்கு ஏற்பாடு ஆகும். அது தவிர, 12 படுக்கைகள் அதிகமாக ஏற்படுத்துவதற்கும் திட்டம் இருக்கிறது.

பார்மஸிஸ்ட் நியமிக்கும் விஷயத்தில், 75 படுக்கைகளுக்கு ஒரு பார்மஸிஸ்ட், 100 அவுட்-பேஷண்டுகளுக்கு ஒரு பார்மஸிஸ்ட் என்ற முறையிலேதான் நியமனம் ஆகிறது. இந்த ஆஸ்பத்திரிக்கும் ஒருவர் இருக்கிருர். ஏதோ தற்காலிகமாக ஒருவர் இன்னொருவர் வேலையைப் பார்த்தால் யாராவது லீவில் போயிருக்கலாம், அல்லது வேறு காரணமாக இருக்கலாம்.

Handloom goods

* 374 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கைத்தறி துணி ஏற்றுமதியை அதிகரிக்க வெளிநாடுகளுக்கு தூது கோஷ்டி அனுப்பும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) அப்படியானுல், யார் யாரைக்கொண்ட தூது கோஷ்டி எந்தெந்த நாடுகளுக்கு எப்போது அனுப்பப்படும் ?

(உ) எவ்வளவு காலம் தூது கோஷ்டியின் சுற்றுப்பிரயாணம் நீடிக்கும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir. Only recently a delegation returned after visiting South East Asian countries.

(*b*) & (*c*) Do not arise.

SRI A. VEDARATHNAM : சமீபத்தில் தூரக் கிழக்குப் பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார்களே, அதனுடைய பலன் என்ன என்பதைத் தயவுசெய்து அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சிலோன், மலேயா, ஹாங்காங் போன்ற பிரதேசங்களில் எந்த அளவுக்குக் கைத்தறித் துணியை விற்க முடியும் என்று அந்தத் தூது கோஷ்டியினர் பரிசீலனை செய்தார்கள். அவர்கள் சில சிபார்சுகள் செய்திருக்கிருர்கள். அதில் சென்ற நான்கு பேர்களும் வியாபாரிகள். அதனுல் அவர்கள் அங்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகளையும் செய்துவிட்டு வந்திருக்கிருர்கள். அவர்களுடைய ரிபோர்ட் பரிசீலனையில் இருக்கிறது.

SRI SOWDI S. SUNDARA BHARATHI : Will the Government consider the setting up of an organization to control and see that only standardized goods are exported and all goods not up to the standard are prevented from being exported?